SURA'S

TN-TET

Tamilnadu Teacher Eligibility Test

தாள் – I

வகுப்பு 1 முதல் 5 வரை

கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு

ஆசிரியர் தகுதி தேர்வு

2026
2025
2022
2019
2017
2013
2012 (மறுதேர்வு)
2012

ஒரிஜினல் வினாத்தாள்கள்
விளக்கமான விடைகளுடன்

சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்
சென்னை

E258

© PUBLISHERS

Tamilnadu Teacher Eligibility Test

தாள் I - வகுப்பு 1 முதல் 5 வரை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு

ISBN: 978-93-6417-069-7

குறியீட்டு எண் : E258

(வெளியீட்டாளர்களின் எழுத்து மூலமான அனுமதி இன்றி இப்புத்தகத்தை மறுபதிப்புச் செய்யவோ, வேறு மொழிகளில் மொழிபெயர்க்கவோ, அச்சடிக்கவோ, போட்டோகாபி செய்யவோ கூடாது)

சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்

தலைமை அலுவலகம்: 1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை-600 040. ☎ 91-44-4862 9977, 4204 3273

ஜி.டி. கிருஷ்ணா பிரஸ், சென்னை – 600 102–இல் அச்சடிக்கப்பட்டு,
சுரா காலேஜ் ஆஃப் காம்படிஷன்
1620, 'ஜே' பிளாக், 16–ஆவது பிரதான சாலை, அண்ணா நகர், சென்னை – 600 040 இல்
திரு. வீ.வீ.கே. சுப்புராசு அவர்களால் வெளியிடப்பட்டது.
தொலைபேசி : 91–44–4862 9977
email: suracollege@gmail.com; enquiry@surabooks.com; website: www.surabooks.com

TN-TET- தாள் – I வகுப்பு 1 முதல் 5 வரை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு

பொருளடக்கம்

பக்கம்

TN-TET–2026 ஒரிஜினல் வினாத்தாள் விடைகளுடன் ..... 1 – 26

TN-TET–2025 ஒரிஜினல் வினாத்தாள் விடைகளுடன் ..... 1 – 22

TN-TET–2022 ஒரிஜினல் வினாத்தாள் விடைகளுடன் ..... 1 – 16

TN-TET–2019 ஒரிஜினல் வினாத்தாள் விடைகளுடன் ..... 1 – 18

TN-TET–2017 ஒரிஜினல் வினாத்தாள் விடைகளுடன் ..... 19 – 30

TN-TET–2013 ஒரிஜினல் வினாத்தாள் விடைகளுடன் ..... 31 – 41

TN-TET–2012 (மறுதேர்வு) ஒரிஜினல் வினாத்தாள் விடைகளுடன் ..... 42 – 52

TN-TET–2012 ஒரிஜினல் வினாத்தாள் விடைகளுடன் ..... 53 – 64

குழந்தை மேம்பாடு கற்பித்தல் முறைகள் ..... 1 - 80

புதிய சமச்சீர் பாடத்திட்டம்

தமிழ் ..... 1 - 112

❖ இலக்கண விளக்கவுரை, ❖ இலக்கணம் – பயிற்சி வினாக்கள்

❖ செய்யுள் இலக்கியம், ❖ உரைநடை இலக்கியம்

English ..... 1 - 96

❖ PROSE ❖ POEM ❖ SUPPLEMENTARY ❖ GRAMMAR

கணிதவியல்

6–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை ..... 1 – 160

சூழ்நிலை அறிவியல்

அறிவியல்

இயற்பியல் ..... 1 – 48

வேதியியல் ..... 1 – 48

உயிரியல் ..... 1 – 64

சமூக அறிவியல்

வரலாறு ..... 1 – 80

குடிமையியல் ..... 1 – 32

புவியியல் ..... 1 – 64

பொருளியல் ..... 1 – 32

❖*****❖

SCHEME OF THE EXAMINATION

PAPER I (Teachers for Classes I to V)

In PAPER - I of the Teacher Eligibility Test, candidates will be tested on five subjects. Each section will have 30 questions of one mark each.

Total Time : 3 Hours

S.No.	Subjects	No. of Questions	Marks
1.	Child Development and Pedagogy	30	30
2.	Language I (Medium of Instruction)	30	30
3.	Language II (Chosen from a list other than Language I)	30	30
4.	Mathematics	30	30
5.	Environmental Studies	30	30
		Total Questions - 150	Total Marks - 150

- Questions on Child Development and Pedagogy will focus on educational psychology of teaching and learning relevant to the age group of 6-11 years. Emphasis will be laid on understanding the characteristics and needs of diverse learners, interaction with learners and the attributes and qualities of a good facilitator of learning.
- Questions on Language I & II will focus as proficiency, elements of language, communication and comprehension abilities.
- MCQs on Mathematics and Environmental Studies will focus on concepts and problem solving abilities. In all these subject areas, the test items shall be evenly distributed over different divisions of the syllabus of that subject prescribed for classes I to V by the appropriate Government.

Note : A person who intends to be a Teacher for Classes I to V and for Classes VI to VIII will have to appear in both the papers (Paper I & Paper II)

தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு

ஒரிஜினல் வினாத்தாள் - 2026

காலம் : 3 மணி நேரம்
மதிப்பெண் : 150

தாள் - I

நாள் : 04.07.2026

பகுதி - I குழந்தை மேம்பாடு மற்றும் கற்பித்தல்

1. **கீழே இரண்டு கூற்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன.**

கூற்று (I) : மனித வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் அனைத்து அம்சங்களும் நெருக்கமான தொடர்பு கொண்டவை.

கூற்று (II) : மனவெழுச்சி மற்றும் சமூக இனக்கமும் உடல் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்துடன் தொடர்புடையது.

மேற்கண்ட கூற்றுகளிலிருந்து மிகவும் பொருத்தமான விடையை கீழ்க்கண்டவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கவும்.

A) கூற்று (I) மற்றும் கூற்று (II) இரண்டும் சரியானது.
B) கூற்று (I) மற்றும் கூற்று (II) இரண்டும் சரியானது அல்ல.
C) கூற்று (I) சரியானது ஆனால் கூற்று (II) சரியானது அல்ல.
D) கூற்று (I) சரியானது அல்ல ஆனால் கூற்று (II) சரியானது.

விளக்கம் : **விடை : (A)**

குழந்தை மேம்பாட்டின் அடிப்படை விதிகளின்படி, வளர்ச்சியின் அனைத்துப் பிரிவுகளும் தனித்தனியாக இயங்குவதில்லை. அவை அனைத்தும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுள்ளன. ஒரு குழந்தையின் உடல் வளர்ச்சி நன்றாக இருந்தால், அது அவர்களின் மூளை வளர்ச்சி (அறிவுத்திறன்) மற்றும் சமூகத்தோடு பழகும் தன்மையையும் நேர்மறையாக பாதிக்கும். எனவே, அனைத்து அம்சங்களும் நெருங்கிய தொடர்புடையவை.

மனவெழுச்சி நிலைத்தன்மையும் இணக்கமும் ஒரு குழந்தையின் ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன. அதிக மன அழுத்தம் அல்லது சமூகப் பயம் உள்ள குழந்தைகளுக்கு உடல் ரீதியான பாதிப்புகள் ஏற்படலாம். இதனால் இவைகளும் உடல் வளர்ச்சியோடு தொடர்புடையதே ஆகும். எனவே கூற்று (I) மற்றும் கூற்று (II) இரண்டும் சரியானது.

2. **கீழே கொடுக்கப்பட்டவைகளில் நியூரானின் பகுதி அல்லாதது எது ?**

A) டென்டிரைட் B) முனைய குமிழ்கள்
C) புகுவாய் D) ஆக்ஸான்

விளக்கம் : **விடை : (C)**

நியூரான் என்பது மூளையின் அடிப்படை செயல்பாட்டு அலகு ஆகும், இது மற்ற நரம்பு செல்கள், தசை அல்லது சுரப்பி செல்களுக்கு தகவல்களை அனுப்புவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு சிறப்பு செல் ஆகும்.

நியூரான்கள் பொதுவாக மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டுள்ளன:

செல் உடல் (சோமா), ஆக்சான் மற்றும் டெனட்ரைட்டுகள். செல் உடலில் நியூக்ளியஸ் உள்ளது மற்றும் இது நியூரானின் வளர்சிதை மாற்ற மையமாகும்.

ஆக்சான்கள் செல் உடலில் இருந்து மின் தூண்டுதல்களை அனுப்புகின்றன, அதே சமயம் டென்ட்ரைட்டுகள் மற்ற செல்களில் இருந்து செய்திகளைப் பெறுகின்றன.

ஆக்சான்: ஒரு ஆக்சான் என்பது ஒரு நரம்பு செல் அல்லது நியூரானின் ஒரு நீண்ட, மெல்லிய நீட்சியும் ஆகும், இது பொதுவாக நியூரானின் செல் உடலில் இருந்து மின் தூண்டுதல்களைக் கடத்துகிறது. ஆக்சான்கள் நரம்பு மண்டலத்தின் முதன்மை கடத்தும் கோடுகள் ஆகும். மேலும் கற்றைகளாக அவை நரம்புகளை உருவாக்க உதவுகின்றன.

டென்ட்ரைட்: டென்ட்ரைட்டுகள் ஒரு நியூரானின் கிளைத்த நீட்சிகளாகும், அவை மற்ற நரம்பு செல்களிலிருந்து பெறப்படும் மின்வேதியியல் தூண்டுதலை நியூரானின் செல் உடலுக்கு அல்லது சோமாவுக்குக் கொண்டுசெல்லும். சினாப்டிக் உள்ளீட்டைப் பெறுவதற்கும், அதன் விளைவாக, நியூரானின் செயல்பாட்டிற்கும் டென்ட்ரைட்டுகள் அவசியம்.

முனைய குமிழ்கள் : சிக்னல்களை அடுத்த செல்லுக்கு அனுப்பும் நரம்பின் இறுதி முனை.

புகுவாய் (Receptor) நியூரானின் பகுதி அல்ல

புகுவாய் என்பது உடலின் வெளிப்புற தூண்டுதல்களை (வெப்பம், வலி, தொடுதல் போன்றவை) உணரும் ஒரு தனி அமைப்பாகும். இது தூண்டுதல்களைப் பெற்று நியூரானுக்கு அனுப்புகிறதே தவிர, நியூரானின் உள் கட்டமைப்பு பகுதி அல்ல.

3. **நமது அவசர காலங்களை சமாளிக்க உதவும் ஹார்மோனானது இது :**

A) தைராக்ஸின் B) அட்ரினலின்
C) வளர்ச்சி ஹார்மோன் D) இன்சுலின்

விளக்கம் : **விடை : (B)**

அட்ரினல் மெடுல்லா இருவகையான ஹார்மோன்களைச் சுரக்கின்றது. எபிநெஃப்ரின் (அட்ரினலின்), நார் எபிநெஃப்ரின் (நார் அட்ரினலின்).

இவ்விரண்டு ஹார்மோன்களும் மன அழுத்தம் மற்றும் உணர்ச்சிவசப்படும் காலங்களில் உற்பத்தியாகின்றன. எனவே 'அவசரகால ஹார்மோன்கள்' என்றும் 'சண்டை, பயமுறுத்தும் அல்லது பறக்கும் ஹார்மோன்கள்' என்றும் அழைக்கப்படுகின்றன.

அட்ரினலின் பணிகள் : கல்லீரல் மற்றும் தசைகளில் உள்ள கிளைக்கோஜனை குளுக்கோஸாக மாற்றுவதை ஊக்குவிக்கின்றன. இதயத்துடிப்பு மற்றும் இரத்த அழுத்தம் ஆகியவற்றை அதிகரிக்கிறது. மூச்சுக்குழல் மற்றும் மூச்சுச் சிற்றறை ஆகியவற்றை விரிவடையச் செய்கிறது. இதனால் சுவாசவீதம் அதிகரிக்கிறது.

கண்பார்வையை விரிவடையச் செய்கிறது. தோலின் அடிப்பகுதியில் செல்லும் இரத்த ஓட்டத்தைக் குறைக்கிறது.

(A) தைராக்ஸின்: இது உடலின் வளர்சிதை மாற்றத்தைக் கட்டுப்படுத்துகிறது.

(C) வளர்ச்சி ஹார்மோன்: இது உடலின் ஒட்டுமொத்த வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

(D) இன்சுலின்: இது இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை முறைப்படுத்துகிறது.

4. **எரிக்சனின் – சமூக கோட்பாட்டின் படி,**
ஒரு குழந்தை தொடக்கப் பள்ளியில் நுழையும் நிலை :

A) இரண்டாம் நிலை B) மூன்றாம் நிலை
C) நான்காம் நிலை D) ஐந்தாம் நிலை

விளக்கம் : **விடை : (C)**

எரிக்சனின் உள–சமூக வளர்ச்சிக் கோட்பாட்டின்படி, குழந்தை தொடக்கப் பள்ளியில் (6-12 வயது) சேரும் போது நான்காம் நிலையான "Industry vs. Inferiority" (திறமை உணர்வு vs. தாழ்வு மனப்பான்மை) நிலையில் இருக்கும். இந்த நிலையில், குழந்தை: படிப்பிலும், விளையாட்டிலும், பள்ளிச் செயல்பாடுகளிலும் திறமையை வளர்த்துக் கொள்கிறது.

ஆசிரியர்கள் மற்றும் நண்பர்களுடன் இணைந்து செயல் படக் கற்றுக் கொள்கிறது. தன் முயற்சியில் வெற்றி பெற்றால் திறமை உணர்வு உருவாகிறது. தொடர்ந்து தோல்வி அல்லது அதிக விமர்சனம் ஏற்பட்டால் தாழ்வு மனப்பான்மை ஏற்படுகிறது. எனவே, தொடக்கப் பள்ளியில் சேரும் குழந்தை நான்காம் நிலையில் இருக்கும்.

5. பின்வருவனவற்றின் கற்றலின் இலக்காக அமையாதது எது ?
A) அறிவைப் பெறல்
B) திறன்களைப் பெறல்
C) மனப்பான்மையைப் பெறல்
D) உடல் ரீதியான முதிர்வைப் பெறல்

விளக்கம் : விடை : (D)

கற்றல் என்பது அனுபவம், பயிற்சி மற்றும் கல்வியின் மூலம் ஒருவரின் அறிவு, திறன் (Skills), மனப்பாங்கு ஆகியவற்றில் நிலையான மாற்றத்தை ஏற்படுத்தும் செயல் முறையாகும். எனவே, அறிவைப் பெறுதல், திறன்களை வளர்த்தல் மற்றும் நேர்மறையான மனப்பாங்கை உருவாக்குதல் ஆகியவை கற்றலின் முக்கிய நோக்கங்களாகும். ஆனால் உடலியல் முதிர்ச்சி என்பது கற்றலால் ஏற்படுவதல்ல. அது வயது அதிகரிப்பு, மரபியல் மற்றும் உயிரியல் வளர்ச்சியின் இயற்கையான விளைவாக நடைபெறும். எனவே, உடலியல் முதிர்ச்சி கற்றலின் நோக்கமாகக் கருதப்படாது.

6. 'LAD' என்பதன் விரிவாக்கம்.
A) Learner Acquisition Device.
B) Language Acquisition Device.
C) Learner Accessible Device.
D) Language Accessible Device.

விளக்கம் : விடை : (B)

Language Acquisition Device (LAD) என்பது மொழியியலாளர் நோம் சாம்ஸ்கி (Noam Chomsky) முன்வைத்த கருத்தாகும். அவரது கோட்பாட்டின்படி, குழந்தைகள் பிறவியிலேயே மொழியைக் கற்கும் இயல்பான திறனுடன் பிறக்கின்றனர். இந்த உள்ளார்ந்த மன அமைப்பே Language Acquisition Device (LAD) எனப்படுகிறது. இது குழந்தைகள் தங்களைச் சுற்றியுள்ள மொழியைக் கேட்டு, அதன் இலக்கண விதிகளை இயல்பாகப் புரிந்துகொண்டு, மிகக் குறுகிய காலத்தில் மொழியைப் பேசவும் பயன்படுத்தவும் உதவுகிறது. எனவே, LAD என்பதன் விரிவாக்கம் "Language Acquisition Device" ஆகும்.

7. உணர்ச்சிக்கும் அறிவாற்றலுக்கும் இடையிலான உறவானது :
A) ஒரே திசையானது B) இருதர திசையானது
C) பன்முக திசையானது D) ஒற்றை திசையானது

விளக்கம் : விடை : (B)

உணர்ச்சி (Emotion) மற்றும் அறிதிறன் (Cognition) ஆகியவை ஒன்றையொன்று பாதிக்கும் இருவழித் தொடர்பு (Bidirectional relationship) கொண்டவை. ஒருவரின் உணர்ச்சிகள் அவரது சிந்தனை, கவனம், நினைவாற்றல் மற்றும் முடிவெடுக்கும் திறனைப் பாதிக்கின்றன. அதேபோல், ஒருவர் ஒரு நிகழ்வை எவ்வாறு புரிந்து கொள்கிறார் அல்லது மதிப்பிடுகிறார் என்பதும் அவரது உணர்ச்சிகளை மாற்றுகிறது. உதாரணமாக, தேர்வை ஒரு வாய்ப்பாகக் கருதும் மாணவர் நம்பிக்கையுடன் இருப்பார்; அதையே அச்சமாகக் கருதும் மாணவர் பதற்றமடைவார். எனவே, உணர்ச்சியும் அறிதிறனும் ஒன்றையொன்று தொடர்ந்து தாக்கம் செலுத்தும் இருவழித் தொடர்புடையவை.

8. எரிக்சனின் உள் சமூக கோட்பாட்டு படிநிலையின் அடிப்படையில் பிறப்பு முதல் முதிர்வு வரை வரிசைப்படுத்துக.
(a) பாலுணர்வு நிலை (b) உள்ளுறைவு நிலை
(c) குமரப்பருவ நிலை (d) குத நிலை

கீழே கொடுக்கப்பட்ட தெரிவுகளிலிருந்து சரியானதை தேர்வு செய்க.
A) (a), (b), (c), (d)
B) (b), (c), (d), (a)
C) (c), (d), (a), (b)
D) (d), (a), (b), (c)

விளக்கம் : விடை : (D)

(a) பாலுணர்வு நிலை (Phallic Stage): இது தோராயமாக 3 முதல் 6 வயது வரையிலான முன்–பள்ளிப் பருவத்தைக் குறிக்கிறது.

(b) உள்ளுறைவு நிலை (Latency Stage): இது சுமார் 6 வயது முதல் பருவம் அடையும் வரை (குமரப்பருவத்திற்கு முந்தைய பள்ளிப் பருவம்) நீடிக்கும் காலமாகும்.

(c) குமரப்பருவ நிலை (Adolescence Stage): இது 12 வயது முதல் முதிர்ச்சி அடையும் வரையிலான பருவத்தைக் குறிக்கிறது. எனவே இது இறுதியாக வரும்.

(d) குத நிலை (Anal Stage): இது பொதுவாக 1 முதல் 3 வயது வரையிலான ஆரம்பக் குழந்தை பருவத்தைக் குறிக்கிறது. எனவே இதுவே முதலில் வரும்.

9. கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு கூற்றுகளில் :
கூற்று (I) : பச்சிளம் குழந்தைகளின் உணர்ச்சி வெளிப்பாடுகளை வகைப்படுத்த பரவலாக பயன்படுத்தப்படும் முறை "MAX" அமைப்பாகும்.
கூற்று (II) : பச்சிளங் குழந்தைகளின் முக தசைகளின் இயக்கம் மற்றும் அடிப்படை உணர்வு நிலைகளை பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது.

மேற்கண்ட கூற்றுகளிலிருந்து, கீழே கொடுக்கப்பட்ட தெரிவுகளிலிருந்து சரியானதை தேர்வு செய்க.
A) கூற்று (I) மற்றும் (II) சரியானது.
B) கூற்று (I) மற்றும் (II) சரியானது.
C) கூற்று (I) சரி மற்றும் கூற்று (II) சரியான தல்ல.
D) கூற்று (I) சரியானதல்ல மற்றும் கூற்று (II) சரியானது.

விளக்கம் : விடை : (B)

MAX முறை குழந்தைகளின் முகபாவனைகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் அடிப்படை உணர்ச்சிகளை அடையாளம் காண பயன்படுகிறது. MAX முறை முகத் தசைகளின் குறிப்பிட்ட அசைவுகளை ஆய்வு செய்து, மகிழ்ச்சி, கோபம், பயம், சோகம் போன்ற உணர்ச்சிகளை வகைப்படுத்துகிறது. எனவே, இரண்டு கூற்றுகளும் சரியானவை.

10. பொருத்துக.

	பட்டியல்–I		பட்டியல்–II
(a)	சங்கிலித் தொடர் கற்றல்	(i)	உயர் மன அல்லது அறிதிறன்களை உள்ளடக்கியது
(b)	கருத்துகளைக் கற்றல்	(ii)	தூண்டலுக்கு ஏற்ப சரியான துலங்குகளை வழங்குதல்
(c)	வாய்மொழிக் கற்றல்	(iii)	இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட S–R இணைப்புகளை ஒருங்கிணைத்தல்
(d)	பிரச்சனையைத் தீர்க்க கற்றல்	(iv)	தூண்டல்–துலங்களுக்கான தொடர் துலங்கல்களை வெளிப்படுத்துதல்

A) (a)–(iv), (b)–(ii), (c)–(i), (d)–(iii)
B) (a)–(i), (b)–(ii), (c)–(iii), (d)–(iv)
C) (a)–(iii), (b)–(ii), (c)–(iv), (d)–(i)
D) (a)–(ii), (b)–(iii), (c)–(i), (d)–(iv)

விளக்கம் : விடை : (C)

சங்கிலித் தொடர்கற்றல் – (iii) சங்கிலித் தொடர் கற்றலில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தூண்டல்–துலங்கல் (S–R)இணைப்புகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு செயல் நடைபெறுகிறது.

கருத்துகளைக்கற்றல் – (ii) கருத்துகளைக் கற்றல் என்பது ஒரு தூண்டலுக்கு ஏற்ற சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து வழங்கும் திறனைவளர்க்கிறது.

வாய்மொழிக்கற்றல் – (iv) வாய்மொழிக் கற்றலில் சொற்கள், கருத்துகள் மற்றும் அவற்றுக்கிடையேயான தொடர்புகளை வெளிப்படுத்துவது முக்கியமானது.

பிரச்சனையைத் தீர்க்கக்கற்றல் – (i) பிரச்சனைகளைத் தீர்ப்பது உயர்நிலை சிந்தனை, பகுத்தறிவு மற்றும் அறிவுத்திறனை உள்ளடக்கிய கற்றலாகும்.

11. ஸ்கின்னரின் ஆக்க நிலையுறுத்தக் கற்றல் சோதனையில் புறாவுக்கு வலுவூட்டியாக இருப்பது ..... .

A) தானியம் B) ஒளி
C) நெம்புகோல் D) சாவி

விளக்கம் : **விடை : (A)**

B.F. ஸ்கின்னரின் ஆக்க நிலையுறுத்தல் (Operant Conditioning) பரிசோதனையில், புறாவிற்கு ஒரு சாவியை (Key) கொத்துமாறு பயிற்சி அளிக்கப்பட்டது. புறா சரியாக சாவியை கொத்தியவுடன் அதற்கு தானியம் (Grain/Food) வழங்கப்பட்டது. தானியம் ஒரு நேர்மறை வலுவூட்டியாக (Positive Reinforcement) செயல்பட்டது. இதனால், புறா அதே நடத்தையை (சாவியை கொத்துதல்) மீண்டும் மீண்டும் செய்யும் வாய்ப்பு அதிகரித்தது. எனவே, புறாவிற்கு வலுவூட்டியாக செயல்பட்டது தானியம் (Grain) ஆகும்.

12. குழந்தைகள் விளையாடும் போது வெற்றி மற்றும் பரிசு பெறுவது எதனோடு தொடர்புடையது ?

A) பயிற்சி விதி B) ஆயத்த விதி
C) உருவாதல் விதி D) விளைவு விதி

விளக்கம் : **விடை : (D)**

எட்வர்ட் எல். தோர்ன் டைக்கின் (Edward L Thorndike) "விளைவு விதி" (Law of Effect)படி, ஒரு நடத்தைக்குப் பிறகு வெற்றி, திருப்தி அல்லது பரிசு கிடைத்தால், அந்த நடத்தை வலுப்பெற்று மீண்டும் நிகழும் வாய்ப்பு அதிகரிக்கும். மாறாக, அதிருப்தி அல்லது தண்டனை கிடைத்தால், அந்த நடத்தை படிப்படியாகக் குறையும். குழந்தைகள் விளையாடும்போது வெற்றி பெறுதல், பாராட்டு அல்லது பரிசு கிடைத்தால், அவர்கள் அதே விளையாட்டில் மீண்டும் ஈடுபட அதிக ஆர்வம் காட்டுவார்கள். இதுவே விளைவுவிதி செயல்படுவதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும்.

13. யானைக்குட்டி (கன்று) பிறந்தவுடன் எழுந்து நடப்பது :

A) முயன்று தவறிக் கற்றல்
B) உட்காட்சி வழிக் கற்றல்
C) போலச் செய்தல் வழிக் கற்றல்
D) இயல்பூக்கக் கற்றல்

விளக்கம் : **விடை : (D)**

பிறந்த உடனேயே யானைக்குட்டி நடக்கத் தொடங்குவது, உள்ளுணர்வு (Instinct) காரணமாகும். இது பிறவியிலேயே மரபணு வழியாகக் கிடைக்கும் இயல்பான நடத்தை ஆகும்; இதற்குமுன் பயிற்சி, அனுபவம் அல்லது பிறரைப் பார்த்து கற்றல் தேவையில்லை. இந்த உள்ளுணர்வு நடத்தை, குட்டி தாயுடன் சேர்ந்து நகரவும், பகைவர்களிடமிருந்து தப்பிக்கவும், உயிர்வாழவும் உதவுகிறது.

14. ஒன்றிற்குள் ஒன்று இறுகிய அடுக்குப் பாத்திரங்களைப் பிரித்தெடுப்பது இவ்வகை கற்றலாகும் :

A) பலவகை வேறுபடுத்திக் கற்றல்
B) சங்கிலிக் கற்றல்
C) பிரச்சினை தீர்த்தல் கற்றல்
D) உடல் இயக்கக் கற்றல்

விளக்கம் : **விடை : (C)**

ராபர்ட் காக்னே அவர்களின் கற்றலின் படிநிலை (Hierarchy of Learning) கோட்பாட்டின்படி, பிரச்சினை தீர்த்தல் கற்றல் (Problem Solving Learning) என்பது மிக உயர்ந்த கற்றல் நிலையாகும். ஒன்றின் உள்ளே ஒன்று வைக்கப்பட்டுள்ள பாத்திரங்களைப் பிரித்தெடுப்பது, அவற்றின் அமைப்பைப் புரிந்து கொண்டு சரியான முறையைத் தேர்ந்தெடுத்து செயல்பட வேண்டிய புதிய சூழ்நிலையாகும். இதற்கு முன் கற்ற அறிவு, பகுத்தறிவு மற்றும் தர்க்க சிந்தனையை இணைத்து தீர்வு காண வேண்டியிருப்பதால், இது சிக்கல் தீர்க்கும் கற்றலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

15. ஆக்க நிலை நிறுத்த கற்றலுக்கு 'Pigeon Box' (புறாப்பெட்டி) சோதனைக் கருவியைப் பயன்படுத்தியவர் .....

A) ஸ்கின்னர் (Skinner) B) வாட்சன் (Watson)
C) கோலர் (Kohlar) D) தார்ண்டைக் (Thorndike)

விளக்கம் : **விடை : (A)**

பி. எப். ஸ்கின்னர் (B.F. Skinner) தனது ஆக்க நிலையுறுத்தல் கற்றல் (Operant Conditioning) கோட்பாட்டை விளக்குவதற்காக ஸ்கின்னர் பெட்டி (Skinner Box) அல்லது Pigeon Box (புறாப்பெட்டி) என்ற சோதனைக் கருவியைப் பயன்படுத்தினார். இதில் புறா ஒரு சாவியை (Key) கொத்தியவுடன் அதற்கு தானியம் (Food) வழங்கப்பட்டது. இந்த நேர் மறை வலுவூட்டல் (Positive Reinforcement) காரணமாக, புறா அதே நடத்தையை மீண்டும் மீண்டும் செய்யக் கற்றுக் கொண்டது.

வாட்சன் (Watson) – பாரம்பரிய நிபந்தனைப் படுத்தல் தொடர்பான Little Albert சோதனையை மேற்கொண்டார்.

கோஹ்லர் (Kohler) – சிம்பான்சிகளில் நுண்ணறிவு கற்றல் (Insight Learning) குறித்து ஆய்வு செய்தார்.

தார்ண்டைக் (Thorndike) – பூனைகளுக்கான Puzzle Box மூலம் முயற்சி–பிழை கற்றலை (Trial and – Error Learning) விளக்கினார்.

எனவே, Pigeon Box–ஐ பயன் படுத்தியவர் பி. எப். ஸ்கின்னர் ஆவார்.

16. பொருத்துக.

பட்டியல்–I	பட்டியல்–II
a) தார்ண்டைக்	i) நடத்தை வலுப்படுத்தல்
b) ஸ்கின்னர்	ii) நடத்தையைக் கற்றல்
c) பாவ்லோ	iii) பயனுள்ளது மற்றும் இலக்கு நோக்கியது
d) கோலா	iv) பரிசு மற்றும் பாராட்டு

A) (a)–(iii), (b)–(iv), (c)–(ii), (d)–(i)
B) (a)–(i), (b)–(ii), (c)–(iii), (d)–(iv)
C) (a)–(iv), (b)–(ii), (c)–(i), (d)–(iii)
D) (a)–(iv), (b)–(i), (c)–(ii), (d)–(iii)

விளக்கம் : **விடை : (D)**

தார்ண்டைக் (Thorndike) தனது விளைவுவிதி (Law of Effect) மூலம் பரிசுமற்றும் பாராட்டு கற்றலை வலுப்படுத்தும் என்று கூறினார்.

ஸ்கின்னர் (Skinner) தனது செயற்பாட்டு உடன்படுத்தல் (Operant Conditioning) கோட்பாட்டில் நடத்தை வலுப்படுத்தல் என்பதையே முக்கியமாக வலியுறுத்தினார்.

பாவ்லோ (Pavlo) தனது செவ்வியல் உடன்படுத்தல் மூலம் தூண்டுதலுக்கு பதிலளிக்கும் நடத்தையை (Learning to Respond Behaviour) விளக்கினார்.

கோலர் (Kohler) தனது நுண்ணறிவு கற்றல் கோட்பாட்டில், கற்றல் என்பது பயனுள்ள மற்றும் இலக்கை நோக்கிய செயலாகும் என்று விளக்கினார்.

17. புதிதாக பிறந்த பறவைகள் / நாய்க்குட்டிகள் அவற்றிற்கு முன்செல்லும் பொருள்களை பின்தொடர்ந்து வாழிடத்திற்கு செல்வது ..... .

A) பயிற்சி வித்தல்
B) போலச் செய்தல்
C) உருப்படுத்தல் / அடியொற்றல்
D) கவனம்

விளக்கம் : **விடை : (C)**

புதிதாகப் பிறந்த பறவைகள் அல்லது நாய்க்குட்டிகள் அவற்றிற்கு முன் செல்லும் பொருள்களைப் பின் தொடர்ந்து செல்லும் நடத்தை உருப்படுத்தல் / அடியொற்றல் (Imprinting) எனப்படுகிறது. இது பிறந்த உடனேயே ஏற்படும் முக்கிய காலப்பகுதியில் உருவாகும் இயல்பான கற்றல் முறையாகும். இந்நிகழ்வை கொன்ராட்லோரன்ஸ் (Konrad Lorenz)

தனது வாத்துக் குஞ்சுகள் மீதான ஆய்வின் மூலம் விளக்கினார். குஞ்சுகள் முதலில் காணும் பெரிய அசையும் பொருளை (பொதுவாகத் தாயை) பின்தொடர்ந்து அதனுடன் நிலையான பிணைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றன. எனவே, இந்நடத்தை உருப்படுத்தல் / அடியொற்றல் என்று அழைக்கப்படுகிறது.

18. ஒரு குழந்தை விளையாடும் போது பொம்மையை தொடுவதை விட, அந்த பொம்மையின் சாயலை கண்டு அதன் செயல்களை கற்பனை செய்கிறது. இது எந்த பொதுமைக் கருத்துருவாக படிநிலையை குறிக்கிறது ?

A) செயல்படு நிலை **B)** குறியீட்டு நிலை
C) வகைப்படுத்தும் நிலை **D)** உருவக நிலை

விளக்கம் : **விடை : (D)**

ஜெரோம்புரூனரின் (Jerome Bruner) பிரதிநிதித்துவக் கோட்பாட்டின்படி, குழந்தைகளின் கருத்துருவாக்கம் மூன்று நிலைகளில் நடைபெறுகிறது: செயற்பாட்டு நிலை (Enactive), உருவகநிலை (Iconic) மற்றும் குறியீட்டு நிலை (Symbolic). உருவக நிலையில் (Iconic Stage), குழந்தை பொருளை நேரடியாகத் தொடவோ பயன்படுத்தவோ இல்லாமல், அதன் படத்தைப் பார்த்து அதன் பயன்பாடு மற்றும் செயல்பாட்டை மனதில் கற்பனை செய்து புரிந்து கொள்கிறது. கேள்வியில், குழந்தை பொம்மையுடன் நேரடியாக விளையாடாமல் அதன் படத்தைப் பார்த்து அதன் செயல்பாட்டைக் கற்பனை செய்கிறது என்று கூறப்பட்டுள்ளதால், இது உருவக நிலையைக் குறிக்கிறது.

19. மக்கள் பச்சை நிற விளக்கு ஒளிர்வதை கண்டவுடன் சாலையை கடப்பதை நிதின் பார்த்து, தானும் பின்பற்றுகிறான். இந்நிலையில் நிதின் எந்த நிலை சிந்தனையைப் பயன்படுத்தினார்?

A) செயல்பாட்டு நிலை **B)** உருவக நிலை
C) குறியீட்டு நிலை **D)** பின்பற்றும் நிலை

விளக்கம் : **விடை : (D)**

இந்தநிகழ்வில், நிதின் பச்சைவிளக்கு எரிந்ததும் மற்றவர்கள் சாலையைக் கடப்பதை கவனித்து, அதே செயலையே பின் பற்றுகிறார். பிறரின் நடத்தையை உற்று நோக்கி அதையே மீண்டும் செய்வது பின்பற்றல் (Imitation) எனப்படும். இது கவனித்தல் மூலம்கற்றல் என்ற கற்றல் முறையின் ஒரு வடிவமாகும். இங்கு குழந்தை எந்தச் செயலையும் தானாக ஆராயவோ, படம் அல்லது குறியீடுகள் மூலம் புரிந்து கொள்ளவோ இல்லை; மாறாக, பிறரின் செயல்களை நேரடியாகப் பின்பற்றுகிறது. எனவே, இது பின்பற்றல் என்பதையே குறிக்கிறது.

20. 'பள்ளிக்கூடம்' என்ற சொல்லை ஒரு கருத்தாக கருதுவது ஏன்?

A) எல்லா பள்ளிகளும் ஒரே கட்டட வடிவில் இருப்பதால்
B) எல்லா பள்ளிகளிலும் ஆசிரியர்கள் எண்ணிக்கை ஒன்றாக இருப்பதால்
C) அறிவை கட்டமைப்பதற்கான ஓர் இடம்.
D) எல்லா கட்டடங்களும் ஒரே நிறத்தில் இருப்பதால்

விளக்கம் : **விடை : (C)**

"பள்ளி"என்ற சொல்லானது அதன் கட்டிட வடிவம், ஆசிரியர்களின் எண்ணிக்கை அல்லது கட்டிடத்தின் நிறம் ஆகியவற்றால் வரையறுக்கப்படுவதில்லை. மாறாக, கற்பித்தல்-கற்றல் நடைபெற்று அறிவு உருவாக்கப்படும் இடம் என்ற பொதுவான நோக்கத்தைக் கொண்ட கல்வி நிறுவனத்தைக் குறிக்கிறது. எனவே, "பள்ளி" என்பது அறிவை கட்டமைப்பதற்கான ஓர் இடம்.

21. பொருத்துக.

பட்டியல்-I		பட்டியல்-II	
(a)	புலன் இயக்க நிலை	(i)	2 முதல் 7 வயது வரை
(b)	செயலுக்கு முற்பட்ட நிலை	(ii)	11 வயதுக்கு மேல்
(c)	புலனீடான செயல் நிலை	(iii)	7 முதல் 11 வயது வரை
(d)	கருத்தியல் நிலை	(iv)	0 முதல் 2 வயது வரை

A) (a)-(iv), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
B) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
C) (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)
D) (a)-(iv), (b)-(i), (c)-(iii), (d)-(ii)

விளக்கம் : **விடை : (D)**

ஜீன்பியாஜெட்டின் அறிவாற்றல் வளர்ச்சி கோட்பாடு (Cognitive Development Theory) என்பது குழந்தைகள் எவ்வாறு சிந்தித்து உலகைப்புரிந்து கொள்கிறார்கள் என்பதை விளக்கும் உளவியல் கோட்பாடாகும். இந்த அறிவு சார் வளர்ச்சியை நான்கு நிலைகளாக வகைப்படுத்தினார். புலன் இயக்க நிலை (0-2 வயது), செயலுக்கு முற்பட்ட நிலை (2-7 வயது), புலனீடான செயல் நிலை (7-11 வயது) கருத்தியல்நிலை (11 வயதுக்குமேல்)

22. கூற்று (A) மற்றும் காரணம் (R) குறித்து மிக பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

கூற்று (A): முன் குழந்தைப்பருவத்தில் காணப்படும் பெரும்பாலான உயிரிய மனவெழுச்சி உடலியலன்றி உளவியல் சார்ந்தது.

காரணம் (R): குழந்தைகள் தங்களால் எளிதாகவும் வெற்றிகரமாகவும் முடிக்க இயலும் எனக் கருதப்பட்டவற்றை செய்ய முடியாதபோது கோபம் கொள்கின்றனர்.

A) (A) மற்றும் (R) இரண்டும் சரியானவை. (R) ஆனது (A) -ன் சரியான விளக்கம்.
B) (A) மற்றும் (R) இரண்டும் சரியானவை, ஆனால் (R) ஆனது (A)-ன் சரியான விளக்கம் அல்ல.
C) (A) சரியானது ஆனால் (R) தவறானது.
D) (A) தவறானது ஆனால் (R) சரியானது.

விளக்கம் : **விடை : (A)**

ஹர்லாக் (Hurlock) கருத்துப்படி, ஆரம்பக் குழந்தைப் பருவத்தில் காணப்படும் தீவிரமான உணர்ச்சிகள் பெரும்பாலும் உளவியல் காரணங்களால் ஏற்படுகின்றன; உடலியல் காரணங்களால் மட்டும் அல்ல. குழந்தைகள் தங்களால் எளிதாகச் செய்ய முடியும் என்று நினைக்கும் செயல்களைச் செய்ய முடியாத போது ஏமாற்றமும் கோபமும் அடைகின்றனர். இந்த இயலாமை உணர்வும் ஏமாற்றமும் அவர்களின் உணர்ச்சி வெடிப்புகளுக்கு முக்கியமான உளவியல் காரணமாக அமைகின்றன. எனவே, கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரியானவை; மேலும், காரணம் (R), கூற்று (A)-க்கு சரியான விளக்கமாகும்.

23. "பின் குழந்தைப்பருவம் என்பது ஏறக்குறைய மனவெழுச்சி அமைதி கொண்ட பருவம்." கொடுக்கப்பட்ட தெரிவுகளில் மிகப்பொருத்தமான காரணத்தைத் தேர்ந்தெடுக்கவும்.

A) அவர்கள் சரிவிதித உணவை உட்கொள்கின்றனர்.
B) அவர்கள் தனி மற்றும் குழு விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர்.
C) அவர்கள் படிப்பில் கவனம் செலுத்துகின்றனர்.
D) அவர்கள் தாங்கள் வைத்திருப்பதுடன் திருப்தியடைகின்றனர்.

விளக்கம் : **விடை : (B)**

"பின்குழந்தைப் பருவம் என்பது ஒப்பீட்டளவில் உணர்ச்சி அமைதி நிறைந்த பருவம்" என்று ஹர்லாக் (Hurlock) குறிப்பிடுகிறார். இந்த வயதில் குழந்தைகள் தனி மற்றும் குழு விளையாட்டுகளில் அதிகமாக ஈடுபடுவதால், தங்களின் உணர்ச்சிகளை ஆரோக்கியமான முறையில் வெளிப்படுத்தவும் கட்டுப் படுத்தவும் கற்றுக் கொள்கின்றனர். மேலும், விளையாட்டுகள் ஒத்துழைப்பு, சுயக்கட்டுப்பாடு, பொறுமை மற்றும் சமூக

ஒத்திசைவு போன்ற பண்புகளை வளர்க்கின்றன. இதனால் அவர்களின் உணர்ச்சி நிலைசீராகி, பிற்காலக் குழந்தைப் பருவம் ஒப்பீட்டளவில் உணர்ச்சி அமைதி நிறைந்த பருவமாக அமைகிறது.

24. ஆக்கவியல் ஆசிரியர் சார்ந்து இரண்டு கூற்றுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

கூற்று (I) : ஆய்வுக்குரிய செயல் திட்டங்கள் அல்லது பிரச்சனைகளை மாணவர்கள் தேர்ந்தெடுக்க ஆசிரியர்கள் உதவவேண்டும்.

கூற்று (II) : மாணவர்கள் தானே கற்பதற்கு உதவ ஆசிரியர்கள் விரிவுரை முறையை பயன்படுத்தவேண்டும்.

மேற்காணும் கூற்றுக்களின் அடிப்படையில், கீழ்க்கண்ட தெரிவுகளில் சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

A) கூற்று (I) மற்றும் கூற்று (II) இரண்டும் சரி
B) கூற்று (I) மற்றும் கூற்று (II) இரண்டும் தவறு
C) கூற்று (I) சரி ஆனால் கூற்று (II) தவறு
D) கூற்று (I) தவறு ஆனால் கூற்று (II) சரி

விளக்கம் : **விடை : (C)**

ஆக்கவியல் கற்றல் அணுகு முறையில், ஆசிரியர் அறிவை நேரடியாக வழங்குபவராக இல்லாமல் வழிகாட்டியாக செயல்படுகிறார். மாணவர்கள் அர்த்தமுள்ள செயல் திட்டங்கள் அல்லது பிரச்சனைகளை தேர்ந்தெடுத்து ஆராய்வதற்கு ஆசிரியர் வழிகாட்ட வேண்டும். எனவே, கூற்று (I) சரியானது. ஆனால், விரிவுரை முறை மூலம் மட்டுமே மாணவர்கள் தாங்களாக அறிவைக் கட்டமைத்துக் கொள்ளமுடியாது. ஆக்கவியல் அணுகுமுறை, மாணவர்கள் அனுபவம், ஆராய்ச்சி, கலந்துரையாடல் மற்றும் செயல் வழிக்கற்றல் மூலம் அறிவை உருவாக்குவதை வலியுறுத்துகிறது. எனவே, கூற்று (II) தவறானது.

25. குழந்தை தன் அன்றாட வாழ்வில் சமூக வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி மற்றும் மொழி வளர்ச்சியைப் பெற எவ்வகைக் கற்றல் உதவுகிறது?

A) இணைத்துக் கற்றல் **B)** வாழ்மொழிக் கற்றல்
C) தொடர் கற்றல் **D)** பின்பற்றிக் கற்றல்

விளக்கம் : **விடை : (D)**

பாண்டுராவின் (Albert Bandura) சமூகக்கற்றல் கோட்பாட்டின்படி, குழந்தைகள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள் மற்றும் சமூகத்தில் உள்ள பிறரைப் பார்த்து அவர்களின் நடத்தையைப் பின்பற்றுவதன் மூலம் சகப் பழக்க வழக்கங்கள், பண்பாட்டு மதிப்புகள் மற்றும் மொழித்திறன்களை வளர்த்துக்கொள்கின்றனர். இந்த பின்பற்றல் அல்லது உற்று நோக்கல் வழிக்கற்றல் குழந்தைகளின் சமூக, பண்பாட்டு மற்றும் மொழி வளர்ச்சியில் முக்கியப் பங்குவகிக்கிறது. எனவே, குழந்தைகள் அன்றாடவாழ்க்கையில் சமூக, பண்பாட்டுமற்றும் மொழி வளர்ச்சியைப் பெற உதவும் கற்றல் வகை பின்பற்றல் ஆகும்.

26. பொருத்துக.

பட்டியல்–I		பட்டியல்–II	
(a)	வகையியல் அணுகுமுறை (Type approach)	(i)	ஐசென்க்
(b)	உளப்பண்பு அணுகுமுறை (Trait approach)	(ii)	கார்ல் ரோஜர்
(c)	வகையியல் மற்றும் உளப் பண்புகள் இணைந்த அணுகுமுறை (Type–cum–Trait approach)	(iii)	ஆல்போர்ட்
(d)	மனிதவியல் அணுகுமுறை (Humanistic approach)	(iv)	ஷெல்டன்

A) (a)-(iv), (b)-(iii), (c)-(i), (d)-(ii)
B) (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)
C) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
D) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

விளக்கம் : **விடை : (A)**

வகையியல் அணுகு முறையை (Type Approach) முன் வைத்த ஷெல்டன், ஆளுமையை உடலமைப்பு வகைகளின் அடிப்படையில் வகைப்படுத்தினார். உளபண்பு அணுகு முறையை முன் வைத்த ஆல்போர்ட், ஆளுமையை மையப் பண்புகள், முதன்மைப் பண்புகள் போன்ற பண்புகளின் அடிப்படையில் விளக்கினார். வகையியல் மற்றும் உள பண்புகள் இணைந்த அணுகு முறையை முன் வைத்த ஐசென்க், ஆளுமையை வகைகளும் பண்புகளும் இணைந்த பரிமாணங்களின் மூலம் விளக்கினார். மனித நேய அணுகு முறையை முன் வைத்த கார்ல் ரோஜர்ஸ், சுயநிறைவு மற்றும் தனி மனித் வளர்ச்சியை வலியுறுத்தினார். எனவே, (a)–(iv), (b)–(iii), (c)–(i), (d)–(ii) என்பதே சரியான பொருத்தமாகும்.

27. கீழ்க் காண்பனவற்றில் 'சூப்பர் ஈகோ' – வின் பண்பு அல்லாதது எது ?

A) ஆளுமையின் அறக்கோட்பாடுகளை உள்வாக்கியது.
B) மகிழ்ச்சியை விட முழுமையான நினைவின் பெறுதலே நோக்கமாகக் கொண்டது.
C) தேவை மற்றும் விரும்பங்களின் நிறைவை மட்டுமே கருத்தில் கொண்டது.
D) எது சரி, எது தவறு என்பது பற்றி முடிவெடுக்கக்கூடியது.

விளக்கம் : **விடை : (C)**

சிக்மண்ட் ஃபிராய்டின் (Sigmund Freud) உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டின்படி, சூப்பர் ஈகோ (Superego) என்பது ஆளுமையின் அறநெறி மற்றும் ஒழுக்கப்பகுதி ஆகும். இது சமூகத்தின் ஒழுக்க நெறிகளையும் மதிப்புகளையும் உள்வாங்கி, எது சரி, எது தவறு என்பதைத் தீர்மானிக்கிறது. மேலும், இன்பத்தை விட முழுமையை (Perfection) அடைவதையே இலக்காகக் கொண்டுள்ளது. எனவே, அறநெறி, ஒழுக்கம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வின் அடிப்படையில் செயல் படுகிறது. ஆனால், தேவைகள் மற்றும் விருப்பங்களின் நிறைவை மட்டுமே கருத்தில் கொள்வது சூப்பர் ஈகோவின் பண்பாகாது. எனவே, விருப்பம் C சரியான விடையாகும்.

28. கீழ்கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வாக்கியங்களில் ஒன்று கூற்று (A) மற்றொன்று காரணம் (R).

கூற்று (A): உடற் கல்வியும், விளையாட்டும் மாணவர்களுக்கு அளிக்கப்படுவது அவசியம்.

காரணம் (R): நன்றாக ஓடியாடி விளையாடும் மாணவர்கள் சுறுசுறுப்பாகவும் கல்வியில் சிறந்தும் காணப்படுவார்.

மேற்காணும் கூற்றுகளிலிருந்து, கீழுள்ள தெரிவுகளில் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி. ஆனால் (R) என்பது (A)–வின் சரியான விளக்கம் அல்ல.
B) (A) மற்றும் (R) இரண்டும் சரி. ஆனால் (R) என்பது (A)–வின் சரியான விளக்கம்.
C) (A) சரிஆனால் (R) தவறு.
D) (A) தவறு ஆனால் (R) சரி.

விளக்கம் : **விடை : (B)**

உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுகள் மாணவர்களின் உடல்நலம், மனநலம், கவனச்செலுத்தும்திறன், ஒழுக்கம், தன்னம்பிக்கை மற்றும் குழு ஒத்துழைப்பு போன்ற பண்புகளை மேம்படுத்துகின்றன. இதன் விளைவாக, மாணவர்கள் சுறுசுறுப்பாக இருந்து கற்றல் செயல்பாடுகளில் சிறப்பாக ஈடுபடுகின்றனர். இந்த உடல் மற்றும் மன வளர்ச்சி கல்வி அடைவையும் மேம்படுத்த உதவுகிறது. எனவே, உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுகள் மாணவர்களுக்கு முக்கியமானவை என்ற கூற்று சரியானது; விளையாட்டில் ஈடுபடும் மாணவர்கள் சுறுசுறுப்பாக இருந்து கல்வியிலும் சிறந்து விளங்குவர் என்ற காரணம், அந்தக் கூற்றிற்கு சரியான விளக்கமாக அமைகிறது.

29. **கீழ்காணும் இரண்டு வாக்கியங்களில் ஒன்று கூற்று (A) மற்றொன்று காரணம் (R) எனக்கொள்க.**

கூற்று (A): செய்தித்தாள்கள், வானொலி, கணினி மற்றும் தொலைக்காட்சி ஆகியவை குழந்தைகளின் ஒழுக்க வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

காரணம் (R): குழந்தைகளின் கற்றலானது பள்ளிக்கு வெளியேயும் நடைபெறுகிறது.

மேற்காணும் கூற்றுகளின் படி, பொருத்தமானதை தேர்வுசெய்க.

A) (A) மற்றும் (R) இரண்டும் சரி மற்றும் (R) ஆனது, (A)–க்கு சரியான விளக்கம் ஆகும்..

B) (A) சரி ஆனால் (R) தவறு.

C) (A) மற்றும் (R) இரண்டும் சரி மற்றும் (R) ஆனது (A)–க்கு சரியான விளக்கம் அல்ல.

D) (A) மற்றும் (R) இரண்டும் தவறு.

விளக்கம் : **விடை : (A)**

செய்தித்தாள், வானொலி, கணினி மற்றும் தொலைக்காட்சி போன்ற தகவல் தொடர்பு ஊடகங்கள், குழந்தைகளுக்கு சமூக நிகழ்வுகள், அறநெறிகள் மற்றும் மதிப்புகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அவர்களின் அறவளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. குழந்தைகளின் கற்றல் வகுப்பறைக்குள் மட்டுமின்றி, வகுப்பறைக்கு வெளியேயும் குடும்பம், சமூகம் மற்றும் ஊடகங்கள் போன்ற பல்வேறு சூழல்களில் நடைபெறுகிறது. எனவே, வகுப்பறைக்கு வெளியேயும் கற்றல் நடைபெறுவதால், தகவல் தொடர்பு ஊடகங்கள் குழந்தைகளின் அறவளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஆகவே, காரணம் (R), கூற்று (A)–க்கு சரியான விளக்கமாகும்.

30. **'அரிச்சந்திர நாடகம்' மூலம் மகாத்மா காந்தியடிகள் கற்றுக் கொண்ட முக்கிய ஒழுக்கப்பண்பு யாது ?**

A) காலந்தவறாமை B) புலால் உண்ணாமை

C) நேர்மை D) உண்மை பேசுதல்

விளக்கம் : **விடை : (D)**

"அரிச்சந்திர நாடகம் மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. உண்மைக்காக எந்தத் துன்பத்தையும் தாங்கிய அரிச்சந்திர மன்னரின் வாழ்க்கை, காந்தியடிகளுக்கு உண்மையை எப்போதும் பேச வேண்டும் என்ற உயரிய அறநெறியைக் கற்றுக்கொடுத்தது. இந்தக் கருத்தே பின்னர் அவரது சத்தியம் (Satya) மற்றும் சத்தியாகிரகக் கொள்கையின் அடித்தளமாக அமைந்தது. எனவே, அரிச்சந்திர நாடகத்தின் மூலம் காந்தியடிகள் கற்றுக் கொண்ட முக்கியபமான அற்ப்பண்பு உண்மையைப் பேசுதல்" ஆகும்.

Part II - தமிழ்

31. **சாகும்போதும் தமிழ்படித்துச் சாக வேண்டும் – என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும் –என்று பாடியவர்:**

A) பாரதியார் B) க. சச்சிதானந்தன்

C) பாரதிதாசன் D) தேவநேயப் பாவாணர்

விளக்கம் : **விடை (B)**

"சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் – என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்" – இந்த புகழ்பெற்ற வரிகள் இலங்கையைச் சேர்ந்த தமிழறிஞரும் கவிஞருமான க.சச்சிதானந்தன் அவர்களால் எழுதப்பட்டது.

பொருள்: நான் இறக்கும் தருவாயிலும் தமிழ் மொழியைப் படித்துக்கொண்டே உயிர்விட வேண்டும்; எனது உடல் எரிந்து சாம்பலாகும் போதும், அந்தச் சாம்பலில் இருந்து தமிழ் மொழியின் மணம் வீச வேண்டும் என்று தனது தீவிரமான தமிழ் பற்றை இவ்வரிகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

பாரதியார்

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" போன்ற புகழ்பெற்ற வரிகளைப் பாடியுள்ளார்.

பாரதிதாசன்

"தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாடிய புரட்சிக்கவிஞர் ஆவார்.

தேவநேயப் பாவாணர்

"தமிழை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான்" என்பது இவரின் கூற்று.

32. **கூற்று (1) : கங்கை கொண்ட சோழபுரம் கோவில் விமானம் 34 அடி குறுக்களவு கொண்டது.**

கூற்று (2) : இவ்விமானம் செங்கற்களால் கட்டப்பட்டது.

A) கூற்று (1) சரி கூற்று (2) சரி

B) கூற்று (1) தவறு கூற்று (2) தவறு

C) கூற்று (1) சரி கூற்று (2) தவறு

D) கூற்று (1) தவறு கூற்று (2) சரி

விளக்கம் : **விடை (C)**

இராஜேந்திரசோழன் தனது கங்கைப் படையெடுப்பு வெற்றியின் சின்னமாகக் 'கங்கை கொண்ட சோழபுரம்' கோயிலை அமைத்தார். இக்கோவிலின் விமானம் 180 அடி உயரம் கொண்டது. இது துண்டுக் கற்களால் அமைக்கப்பட்ட விமானம் ஆகும்.

கோவிலின் வாயில் தரை மட்டத்திலிருந்து 20 அடி உயரத்தில் இருப்பதே இதன் சிறப்பு. கோபுரத்தின் உச்சியில் இருப்பது மிகப்பெரிய வட்ட வடிவக் கல். அது 34 அடி குறுக்களவு கொண்டது.

எனவே கூற்று (1), (2) தவறு.

33. **கூற்று : பிறக்கும் இடம், ஒலிக்கும் முயற்சி, கால அளவு, வடிவம் முதலியவற்றில் சில எழுத்துகள் ஒத்துப்போகின்றன. அவற்றை இன எழுத்துக்கள் என்று கூறுவர்.**

காரணம் : எல்லா இன எழுத்துகளும் சொல்லில் ஒன்றாகச் சேர்ந்து வரும்.

A) கூற்று தவறு காரணம் சரி

B) கூற்று சரி காரணம் தவறு

C) கூற்று சரி காரணம் சரி

D) கூற்று தவறு காரணம் தவறு

விளக்கம் : **விடை (B)**

கூற்று சரி:

தமிழ் இலக்கணத்தில், எழுத்துகள் பிறக்கும் இடம் மற்றும் ஒலிக்கும் முயற்சி ஆகியவற்றில் ஒற்றுமை உடைய எழுத்துகள் 'இன எழுத்துகள்' (நிபு எழுத்துகள்) என்று அழைக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு: வல்லின எழுத்துகளுக்கு மெல்லின எழுத்துகள் இன எழுத்துகளாக அமைகின்றன (க் – ங், ச் – ஞ், ட் – ண், த் – ந், ப் – ம், ற் – ன்). எனவே, கொடுக்கப்பட்டுள்ள கூற்று சரியானது.

காரணம் தவறு :

கூற்றில் சொல்லப்பட்டவாறு எல்லா இன எழுத்துகளும் சொற்களில் எப்போதும் ஒன்றாகச் சேர்ந்து வருவதில்லை. மெல்லின மெய் எழுத்துகளைத் தொடர்ந்து பெரும்பாலும் அவற்றின் இனமாகிய வல்லின எழுத்துகள் சேர்ந்து வரும் (எ.கா: தங்கம், பஞ்சு, கம்பு, மன்றம்).

ஆனால், இடையின எழுத்துகள் ஆறிற்கும் (ய், ர், ல், வ், ழ், ள்) ஒரே இனமாக இருப்பதால் அவை இவ்வாறு இணைந்து வருவதில்லை. அதேபோல், உயிர் எழுத்துகளில் நெடில் எழுத்துகளுக்குக் குறில் எழுத்துகள் இன எழுத்துகளாகும். இவை செய்யுளில் அளபெடையில் மட்டுமே சேர்ந்து வரும், சாதாரண சொற்களில் ஒன்றாகச் சேர்ந்து வராது. எனவே, "எல்லா இன எழுத்துகளும் சொல்லில் ஒன்றாகச் சேர்ந்து வரும்" என்ற காரணம் தவறானது.

34. 'நிருமித்த' என்ற சொல்லின் பொருள்
A) நிரூபித்த B) சிறப்பித்த
C) உருவாக்கிய D) பாராட்டிய

விளக்கம் : விடை (C)

இன்பத் தமிழ்

தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர் – இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர் – இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!

– பாரதிதாசன்

இப்பாடலின் வரியான "இன்பத்தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!" என்பதில் 'நிருமித்த' என்ற சொல்லின் பொருள் 'உருவாக்கிய' என்பதாகும்.

35. பொருத்துக:

a)	ஆழிக் கிணறு	i) கமலை நீர்ப்பாய்ச்சும் கிணறு
b)	உறைக் கிணறு	ii) கடலருகே தோண்டிய கிணறு
c)	கட்டுக் கிணறு	iii) மணற்பாங்கான இடத்தில் தோண்டிய கிணறு
d)	பூட்டைக் கிணறு	iv) சரளை நிலத்தில் தோண்டிய கிணறு

(A) (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)
(B) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)
(C) (a)-(iii), (b)-(i), (c)-(ii), (d)-(iv)
(D) (a)-(ii), (b)-(iii), (c)-(i), (d)-(iv)

விளக்கம் : விடை (A)

நீர்நிலைகளின் தமிழ்ப் பெயர்கள்

ஆழிக் கிணறு – கடலருகே தோண்டிய கிணறு

உறைக் கிணறு – மணற்பாங்கான இடத்தில் தோண்டிச் சுடுமண் வளையமிட்ட கிணறு

கட்டுக்கிணறு – சரளை நிலத்தில் தோண்டி கல், செங்கற்களால் அகச்சுவர் கட்டிய கிணறு

பூட்டைக் கிணறு – கமலை நீர் பாய்ச்சும் அமைப்புள்ள கிணறு

அகழி – கோட்டையின் புறத்தே அகழ்ந்தமைக்கப்பட்ட நீர் அரண்

அருவி – மலைமுகட்டுத் தேக்கநீர் குத்திட்டுக் குதிப்பது.

ஆறு – பெருகி ஓடும் நதி

இலஞ்சி – பல வகைக்கும் பயன்படும் நீர்த்தேக்கம்

ஊருணி – மக்கள் பருகுநீர் உள்ள நீர்நிலை

ஊற்று – அடியிலிருந்து நீர் ஊறுவது

ஏரி – வேளாண்மைப் பாசன நீர்த்தேக்கம்

கடல் – சமுத்திரம்

கண்மாய் – பாண்டி மண்டலத்தில் ஏரிக்கு வழங்கப்படும் பெயர்

குண்டம் – சிறியதாய் அமைந்த குளிக்கும் நீர்நிலை.

குண்டு – குளிப்பதற்கேற்ற சிறுகுளம்

குமிழி ஊற்று – நீரானது நிலமட்டத்திற்கு மேல் கொப்புளித்து வரும் ஊற்று.

கேணி – அகலமும் ஆழமும் உள்ள பெருங்கிணறு

புனற்குளம் – நீர்வரத்து மடையின்றி மழைநீரையே கொண்டுள்ள குளிக்கும் நீர்நிலை.

36. பொருத்துக

a)	இயற்கை ஓவியம்	i) கம்பராமாயணம்
b)	இயற்கை இன்பக்கலம்	ii) பத்துப்பாட்டு
c)	இயற்கைப் பரிணாமம்	iii) பெரியபுராணம்
d)	இயற்கை அன்பு	iv) கலித்தொகை

A) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
B) (a)-(ii), (b)-(iv), (c)-(iii), (d)-(i)
C) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
D) (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)

விளக்கம் : விடை (C)

பத்துப்பாட்டு – இயற்கை ஓவியம்
கலித்தொகை – இயற்கை இன்பக்கலம்
கம்பராமாயணம் – இயற்கைப் பரிணாமம்
பெரியபுராணம் – இயற்கை அன்பு

மேலும் சில

திருக்குறள் – இயற்கை வாழ்வில்லம்
சிலப்பதிகாரம், மணிமேகலை – இயற்கை இன்ப வாழ்வு நிலையங்கள்
சீவகசிந்தாமணி – இயற்கைத் தவம்
தேவார, திருவாசக, திருவாய் மொழிகள் – இயற்கை இறையுறையுள்

37. சீர்களை வரிசைப்படுத்திக் குறளை எழுதுக.
A) நிறையுடைமை வேண்டின் பொறையுடைமை நீங்காமை போற்றி ஒழுகப் படும்.
B) நிறையுடைமை நீங்காமை பொறையுடைமை வேண்டின் போற்றி ஒழுகப் படும்.
C) நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை போற்றி ஒழுகப் படும்.
D) பொறையுடைமை நீங்காமை வேண்டின் நிறையுடைமை போற்றி ஒழுகப் படும்

விளக்கம் : விடை (C)

பொறையுடைமை

நிறையுடைமை நீங்காமை வேண்டின்
பொறையுடைமை போற்றி ஒழுகப் படும். – (குறள் 153)

பொருள்: நற்பண்புகள் (நிறையுடைமை) நம்மை விட்டு நீங்காமல் இருக்க வேண்டும் என நாம் விரும்பினால், பொறுமையைப் (பொறையுடைமை) போற்றிப் பின்பற்ற வேண்டும்.

38. கூற்று (1) : கேட்டல், பேசுதல் என்னும் முதல் நிலையிலேயே குழந்தைகளுக்குத் தாய்மொழி அறிமுகமாகிறது.
கூற்று (2) : படித்தல், எழுதுதல் என்னும் இரண்டாம் நிலையில் பிறமொழிகள் அறிமுகம் ஆவதில்லை.
A) கூற்று (1) சரி; கூற்று (2) சரி
B) கூற்று (1) சரி; கூற்று (2) தவறு
C) கூற்று (1) தவறு; கூற்று (2) தவறு
D) கூற்று (1) தவறு; கூற்று (2) சரி

விளக்கம் : விடை (B)

வாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சுமொழியாகும். இவ்வாறு கேட்பதும் பேசுவதும் மொழியின் முதல் நிலை. ஒரு குழந்தை தன் தாய்மொழியைக் கேட்கத் தொடங்குவதிலும், பேசுவதிலும் தான் முதலில் கற்றுக் கொள்கிறது. மொழி கற்றலின் முதல் நிலைகளான கேட்டல், பேசுதல் மூலமே குழந்தைகளுக்குத் தாய்மொழி அறிமுகமாவது முற்றிலும் சரியானதாகும்.

